**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.266/2023 இ.ம.எண்.

எம்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர். 2ம்பிரதிவாதி ஆஜர். 1ம் பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கண்ணன் | மாவட்டம் | : |
| த/பெ.பெயர் | : அங்கப்பன் | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டு ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. 04.09.2019 தேதியில் உள்ள 1ம்பிரதிவாதி எனக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணம் இணையதள நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 04.09.2019 தேதியில் உள்ள பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொடுத்த உறுதிமொழி வர்த்தமான கடிதம் அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆவணங்கள் போலியான ஆவணங்கள் என்று பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை எழுப்பபட்டு மேற்படி 2 ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல்விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.